# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 229/2022

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. வெங்கட்ரமணா | | |
| த/பெ. | கிருஷ்ணய்யா | வட்டம் | கோட்டகிண்டபள்ளி |
| கிராமம் | கோட்டகிண்டபள்ளி | வயது | 34 |
| தொழில் | ஓய்வு | மாவட்டம் | சித்தூர் (ஆந்திரா) |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 10வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | பதிவு புத்தகம் நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ 3 | காப்பீட்டு பாலிசி நகல் |
| ம.சா.ஆ 4 | ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 5 | காயச்சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 6 | ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் நகல் |
| ம.சா.ஆ 8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் |
| ம.சா.ஆ 9 | குற்றப்பத்திரிக்கை நகல் |
| ம.சா.ஆ 10 | கதிரியக்கப்படம் அசல் |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

விபத்து சமயத்தில் எனக்கு 30 வயது. நான் காவலாலியாக வேலை செய்தேன். மாதம் ரூ.20,000/- சம்பாதித்தேன். எனது வயது வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து எனது அண்ணன் ரவி புகார் கொடுத்தார். நான் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது எனக்கு முன்னால் சென்ற டீசல் டேங்கர் லாரி திடீரென வலது புறமாக திரும்பியதால் என் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் எனது இடது கணுக்காலில் எலும்பு முறிவு காயம் ஏற்பட்டது. இரண்டு கை மணிக்கட்டுகளிலும் எலும்பு முறிவு காயம் ஏற்பட்டது. இடது கணுக்காலிலும் வலது கை மணிக்கட்டிலும் ராடு பொருத்தப்பட்டுள்ளது. தலையில ஏற்பட்ட காயத்திற்கு 30 தையல் போடப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் நான் தலைவசகம் அணிந்திருந்தேன். எனது ஓட்டுநர் உரிமம் விபத்து ஏற்பட்ட இடத்தில் கீழே விழுந்துவிட்டது. எனது கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இரு சக்கர வாகனத்தை ஓட்டியதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல

என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது பெற்றோர் பார்த்துக்கொள்கிறார்.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி